[1994 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 195, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

195--

குன்னூரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்

***20521-டாக்டர் எம். கருப்புசாமி :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குன்னூர் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறிவிட்டார்கள். ஆனால் குன்னூர் என்பது குன்றுகளால் சூழப்பட்டிருக்கிற நகரம். அதில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் மக்களுக்கு மேல் வாழ்கிறார்கள். குன்னூரினுடைய மையப் பகுதியில் பஸ் ஸ்டாண்டு, மார்க்கெட், ரயில்வே நிலையம் ஆகியவை சமமான பகுதியிலும், சுற்றிலும் மலைச் சிகரமாக இருப்பதால் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற-அந்தச் சாலை ஓரக் கால்வாய்களில் சாக்கடை மிக அதிகமாக வந்து மழை நீரும் மக்கள் நடமாடக்கூடிய அந்தப் பகுதியில் 2 அடி அல்லது 3 அடி உயரத்திற்குத் தேங்கி சேறும், சகதியுமாக மாறிவிடுவதால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சாக்கடை நீர் அதிகமாகத தேங்குவதால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனைச் செய்து அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்து அங்கு பள்ளத்தை நோக்கி வேகமாக ஓடுகின்ற அந்த ஆற்றோடு இணைத்துவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். ஆகவே, தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டம் என்று சொல்லுகின்ற அளவிலே பல கோடிக் கணக்கான ரூபாய் திட்ட மதிப்பீடு தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு குன்னூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம், அமைக்கப்படவுள்ள நகராட்சிகளின் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறவில்லை என்பதோடு அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக இந்த பாதாள சாக்கடைத் திட்டம் தற்போது அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே, குன்னூர் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் காரணமாக மார்க்கெட் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. அப்போது, மறைந்துவிட்ட டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் குன்னூர் நகரத்தைப் பார்வையிட்டு 24 லட்சம் ரூபாய் செலவில் குன்னூர் பஸ் ஸ்டாண்டு அருகில் உள்ள அந்த சாக்கடையை மூடி டாக்ஸி ஸ்டாண்டு மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்கு ஒரு திட்டம் போட்டார்கள். அதையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அமைதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, குன்னூர் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பற்றி. தற்போது அவர் எழுப்பியுள்ள வினா மழைக் காலத்திலே பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டு, அதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தைப் போக்குகின்ற வகையிலே ஒரு திட்டத்தைச் சொல்லுகின்றார்கள். அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 196 திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.